மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre


# பேச்சுப் போட்டி 2022


Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


## ஆண்டு 1

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் வணக்கம் !

## தமிழ்

அன்போடு விரல் பிடித்து
அரிசி மீது எழுத வைத்து
அம்மா எனக்குச் சொன்ன தமிழ்.
அமுதெனவே இனிக்கும் தமிழ்!

பேசப்பேச இனிப்பதுவாம்
பெருமை பல கொண்டதுவாம்.
எந்நாளும் இனியதுவாம்.
எங்கள் தமிழ் உயர்ந்ததுவாம்!

ஔவைப் பாட்டி சொன்ன தமிழ்.
வள்ளுவரும் வளர்த்த தமிழ்.
காக்கா நரி பாட்டி என
கதைகள் பல உள்ள தமிழ்!

முத்து முத்தாய் எழுதிடுவோம்.
முழு மூச்சாய்க் கற்றிடுவோம்.
முத்தமிழைப் பயின்றிடுவோம் – தமிழே
மூச்சென போற்றிடுவோம்!




நன்றி,
வணக்கம்.


ஆக்கம் : ஆசிரியர் திருமதி. கஜந்தி சதீஸ்கரன்.
ஆசிரியர் செல்வி. சிந்துஜா செல்வானந்தன்.


பேச்சுப் போட்டி எதிர்வரும் 28.05.2022 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

“கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழ் நந்தமிழ்”